Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.DVC.13/21 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.2 |
| Name: | இந்திரா ஜெயசீலி |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 27.04.2023. | |

**முதல் விசாரணை** : நேரம் :

1. நான் விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் மாவட்ட பாதுகாப்பு அலுவலராக பணியாற்றி வருகிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். மனுதாரர் திருமதி. மாதவி என்பவர் வழக்கு சம்பந்தமாக சமூக நல அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பாக வாக்குமூலம் கொடுக்க வந்துள்ளேன். மேற்படி விசாரணை முடிவில் குடும்ப வன்முறை அறிக்கை

தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த குடும்ப வன்முறை அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். (**அந்த அறிக்கை ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. மேற்படி விசாரணையின் போது 1 முதல் 3 வரை உள்ள எதிர்மனுதாரர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலங்களையும் குடும்ப வன்முறை அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். (**1 வது எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). (**3 வது எதிர்மனுதாரரின் அளித்த கடிதம் ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது விசாரணையில் மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறை செய்தது தெரியவந்தது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இன்றைய தினம் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் போன வாய்தாவிற்கு அழைப்பாணை வந்தது, அன்று கூகுள் ஆய்வுக்கூட்டம் இருந்ததால் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். மனு தொடர்பாக விசாரிக்க உத்தரவிட்டு நீதிமன்றத்தால் எப்போது கடிதம் பெறப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மனுதாரர்களையும், எதிர்மனுதாரர்களையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெறுவதற்கு அழைப்பாணை அனுப்பினேன். அழைப்பாணை அனுப்பப்பட்ட தேதி ஞாபகம் இல்லை. 14.12.2021ம் தேதி மனுதாரர் மற்றும் மூன்று எதிர்மனுதாரர்களும் விசாரணைக்கு என் முன்பாக ஆஜரானார்கள். மனுதாரர் முன்னிலையில் எதிர்மனுதாரர்களை விசாரணை செய்தேன், மனுதாரரை தனியாக விசாராணை செய்தேன்.

2. எனது விசாரணையில் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும்

ஓடைபட்டியில் உள்ள பிள்ளையார் கோவிலில் 5.11.2014ம் தேதி திருமணம் நடைபெற்றதாக தெரிய வந்தது. மனுதாரரை விசாரணை செய்தேன், ஆனால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. எதிர்மனுதாரர்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர் எனது விசாரணையில் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் பெரிய ஓடைப்பட்டி விநாயகர் கோவிலில் வைத்து மனுதாரர்களின் உறவினர்கள் மிரட்டியதன் பேரில் தாலி கட்டுவது போல் போட்டோ எடுக்க சொல்லியும் அந்த போட்டோவை வைத்து மிரட்டி சில அரசியல் பிரமுகர்களை மற்றும் உறவினர்கள் மிரட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் திருமணத்தை பதிவு செய்துவிட்டார்கள் என்று கூறியுள்ளார் என்றால் அவ்வாறு கூறி 1ம்எதிர்மனுதாரரே எழுதி கொடுத்துள்ளார். ம.சா.ஆ.15 ஆவணத்தில் 3ம் எதிர்மனுதாரர் பெயர் மட்டும் தான் அனுப்புனராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் 2 மற்றும் 3 வது எதிர்மனுதாரர்கள் சேர்ந்து கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள்.

3. மனுதாரர் தனது குழந்தைக்கு DNA Test எடுப்பதற்கு சம்மதம் இல்லை என்று எனது விசாரணையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அந்த குழந்தை Cancer நோயினால் பாதிக்கப்பட்டதால் அந்த குழந்தைக்கு இரத்தம் ஏற்றி இருப்பதால் அந்த நேரத்தில் இரத்த மாதிரி எடுத்தால் 1ம் எதிர்மனுதாரர்தான் தகப்பனார் என்று பரிசோதனையில் வராது என்று மனுதாரர் அறியாமையின் காரணமாக அவ்வாறு கருதி பரிசோதனை செய்ய மறுத்துள்ளார். ம.சா.ஆ.13 விசாரணை அறிக்கையில் மனுதாரர் அறியாமையின் காரணமாக DNA பரிசோதனைக்கு மறுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் கல்வி அறிவு இல்லாத காரணத்தினால் பரிசோதனைக்கு மறுத்ததாக கூறியுள்ளேன். மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் சட்டப்படி திருமணம் நடைபெற காரணத்தினால்

எனது அறிக்கை ம.சா.ஆ.13 சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ஒரு தலைபட்சமாக விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.